**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 132/2022**
**Prosecution Witness**:1

| Name | நவீன்குமார் (PW1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது தாராபுரம், சங்கரண்டாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனக்கு அண்ணன் ஆவார். கடந்த 13.02.2021 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் எனது நண்பர் நவீன்குமார் எனக்கு போன் செய்து எனது அண்ணன் சிவகிரி, ஒத்தப்பனை அருகே சென்றபோது சாலையின் ஓரமாக ஒரு லாரி அஜாக்கிரதையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும், அதன் பின்புறம் எனது அண்ணன் மோதி விபத்து நடந்ததாக தகவல் தெரிவித்தார். மேற்படி விபத்தை ஏற்படுத்திய லாரியின் பதிவெண். TN 33 BL 2514 ஆகும். உடனே நானும் எனது அப்பாவும் முத்தூரில் இருந்து கிளம்பி சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். எனது அண்ணனுக்கு தலை, மார்பு மற்றும் இடது காலில் பலத்த அடிபட்டிருந்தது. அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காங்கயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை CMC மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டு சிவகிரி காவல்நிலையத்திற்கு சென்று விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மறுநாள் காலை 01.00 மணிக்கு சிகிச்சை பலனின்றி எனது அண்ணன் இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:07:32 +0530

சாட்சி நவீன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் முத்தூரை சேர்ந்தவர் ஆவார். நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்று சேர்ந்தேன் என்றால் சுமார் 10.15 மணி இருக்கும். விபத்து நடந்த போது போலீசார் அங்கு வந்தார்களா என்றால் நான் இருக்கும் வரை வரவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் போலீசார் கோவை சி.எம்.சி. மருத்துவமனையில் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் யாரிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் என்னிடமும் எனது அப்பாவிடம் மட்டும் கையொப்பம் வாங்கினார்கள். நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்கள் வந்து விபத்தை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனது அண்ணன் தான் மதுபோதையில் நின்று கொண்டிருந்த லாரியின் மீது மோதி விட்டார் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய லாரி நின்று கொண்டிருந்தது என்றால் இல்லை சென்று கொண்டிருந்த லாரி திடீரென நின்று விட்டது மேற்படி சம்பவம் நடந்த விதத்தை யார் என்னிடம் கூறினார்கள் என்றால் நவீன் குமார் என்னிடம் கூறினார். எனது அண்ணன் இறந்தது சம்பந்தமாக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் எதிரியல்ல என்றாலும், எனது அண்ணன் தான் அஜாக்கிரதையாக சென்று மோதி விட்டார் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:07:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 132/2022**
**Prosecution Witness**:2

| Name | **சக்திவேல்** (PW2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது வெள்ளியம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். 13.02.2021 அன்று இரவு சுமார் 09.45 மணியளவில் நானும் அப்புகுட்டி என்பவரும் முத்தூரில் இருந்து ஈரோட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். விபத்தில் இறந்த நந்தகுமார் எங்களுக்கு முன்னால் எங்களது வாகனத்தை முந்திகொண்டு TN 78 E 0763 என்ற எண்ணுள்ள பல்சர் இருசக்கர வாகனத்தில் சென்றார். அவருக்கு முன்னால் சென்ற TN 33 BL 2514 என்ற எண்ணுள்ள லாரி திடீரென நின்றதால் நந்தகுமார் லாரியின் பின்புறம் மோதிவிட்டார். அவருக்கு தலை, நெஞ்சு மற்றும் தொடை பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. நந்தகுமாரின் அப்பாவிற்கு விபத்து குறித்து தகவல் தெரிவித்தோம். சம்பவ இடத்திற்கு அவரது அப்பா மற்றும் தம்பி வந்தார்கள். விபத்தில் அடிபட்ட நந்தகுமாரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். நந்தகுமார் சிகிச்சை பலனின்றி மறுநாள் இறந்துவிட்டதாக தகவல் கேள்விபட்டேன். மறுநாள் சம்பவ இடம் வழியாக ஈரோடு சென்றபோது போலீசார் விபத்து பற்றி என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

விபத்தில் இறந்தவர் எனக்கு நண்பர் என்றால் சரியல்ல அறிமுகமானவர். எனக்கு சொந்த ஊர் வெள்ளியம்பாளையம் என்றால் சரிதான். சாட்சி அப்புக்குட்டியை எங்கிருந்து கூட்டிச் சென்றேன் என்றால் முத்தூரில் உள்ள டீக்கடையில் இருந்து அழைத்துச் சென்றேன். மேற்படி டீக்கடையின் பெயர் எனக்கு தெரியாது. அப்பு குட்டி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:07:43 +0530

மேற்படி டீக்கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் என்ன வேலையாக ஈரோடு சென்றோம் என்றால் பைனான்ஸ் தொழில் சம்பந்தமாக சென்று இருந்தோம். விபத்தில் இறந்த நந்தகுமார்எந்த இடத்தில் எங்களை ஓவர் டேக் செய்தார் என்றால் இடத்தின் பெயர் சரியாக ஞாபகம் இல்லை முத்தூரில் இருந்து சுமார் ஒன்றரை கிலோ மீட்டர தூரம் இருக்கும்.சம்பவம் நடந்த நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். நந்தகுமார் எனக்கு முன்பாக சுமார் 100 மீட்டர் தூரத்தில் சென்று கொண்டிருந்தார். டமார் என்று சத்தம் கேட்ட பிறகு நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் வந்தார்கள் போலீசார் சம்பவம் நடந்த சமயத்தில் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை சம்பவம் நடந்த சமயத்தில் அக்கம் பக்கத்தினர் வந்து பார்த்தார்களா என்றால் இல்லை எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல. போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் காலை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சுமார் 06.00 மணி இருக்கும் நான் செல்வதற்கு முன்பே போலீசார் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, அதில் என்னிடமும் அப்புகுட்டியிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்லநான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியில்லை.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:07:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 132/2022**
**Prosecution Witness**:3

| Name | பழனிசாமி (PW3) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது விளக்கேத்தியில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். 13.02.2021 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் ஒத்தப்பனை அருகே வந்து கொண்டிருந்தபோது எனக்கு முன்பாக விபத்தில் அடிபட்ட நந்தகுமார் அவரது பல்சர் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார். அவருக்குமுன்பாக டிப்பர் லாரி ஒன்று சென்றுகொண்டிருந்தது. திடீரென்று மேற்படி லாரியை அதன் ஓட்டுநர் எவ்வித சைகை இன்றியும், இண்டிகேட்டர் போடாமலும் நிறுத்திவிட்டார். இதனால் நந்தகுமார் தனது இருசக்கர வாகனத்தில் லாரியின் பின்பக்கத்தில் மோதிவிட்டார். நான் சென்று பார்த்தபோது எனக்கு தெரிந்த நந்தகுமாருக்கு தான் விபத்து ஏற்பட்டது என்று தெரிந்தது. உடனே நந்தகுமாரின் அப்பாவிற்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தேன். ஆஜரில் உள்ள எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய லாரியை ஓட்டிவந்த நபர் ஆவார். சம்பவ இடத்திற்கு வந்து நந்தகுமாரின் அப்பா மற்றும் அவரது தம்பி ஆம்புலன்ஸ் மூலமாக காங்கயம் அரசு மருத்துவமனைக்கு கூட்டி செல்வதாக கூறிவிட்டு கிளம்பிவிட்டார்கள். மறுநாள் காலை சிகிச்சை பலனின்றி நந்தகுமார் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

இறந்து போனவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் பழக்க வழக்கம் உள்ளவர். எனக்கு முன்பாக நந்தகுமார் எவ்வளவு தூரத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சுமார் 30, 40 அடி இருக்கும். டமார் என்று சத்தம் கேட்ட பிறகு தான் நான்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:00 +0530

சென்று பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பகுதி இருட்டாக இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நான் ஒருவர்தான் அங்கு இருந்தேன் என்றால் சரியல்ல இரண்டு பேர் இருந்தார்கள். விபத்து நடந்த பிறகு தான் நந்தகுமாருக்கு விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய லாரியில் என்ன லோடு இருந்தது என தெரியாது என்றால் சரிதான். அது என்ன வகையான லாரியென எனக்கு தெரியாது என்றால் சரிதான் மேற்படி லாரியை இன்னும் எனக்கு தெரியாது. போலீசாருக்கு சம்பவம் குறித்து தகவல் சொன்னார்களா என்றால் அருகில் இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். போலீசார் விபத்து நடந்த உடனே சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது என்னை போலீசார் விசாரித்து சம்பவத்தை பற்றி தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான்அருகில் உள்ள நபர்களிடமும் விசாரித்து வாக்குமூலம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்த்தேன் என்றால் லாரியில் மோதியதை நான் பார்த்தேன் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நந்தகுமார் ஒட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் சிக்கிய வாகங்களுக்கு சேதாரம் ஆனது பற்றி உனக்கு தெரியுமா என்றால் இரு சக்கர வாகனத்தின் முன் பகுதி சேதமாயிருந்தது, லாரியில் எந்த பகுதியில் சேதமாகியிருந்தது என நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள் அப்பொழுது நான் மட்டும் தான் இருந்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் விபத்தில் இறந்தவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அதிக நஷ்ட ஈடு தொகை பெற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.